**சுருக்கம்**

பள்ளிக்கல்வி-2005-2006ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டம்-50 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 100 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் கருவிகள் வழங்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வித் (இ2) துறை**

அரசு ஆணை (நிலை) எண். 80,
நாள் 16.5.2005

படிக்கப்பட்டவை:

இயக்குநர், பாள்ளிக்கல்வித்துறை, சென்னை கடிதம்
ந.க.எண்.94479/பிடி1/2004 நாள் 6.1.2005.

*****

ஆணை:

அனைத்து துறைகளிலும் ஏற்படும் முன்னேற்றங்கள் 6-லிருந்து 10ம் வகுப்புகளுக்கு உள்ள அறிவியல் பாடத்திட்ட திருத்தத்தின் போது சேர்க்கப்பட்டுள்ளன. மாணவர்கள் அறிவியல் பாடத்தை செயல்முறை மூலம் அறிய வேண்டும் என்ற குறிக்கோளை அடைவதற்கு அறிவியல் உபகரணங்களை கையாள்வதற்கும் அவைகளை செயல்முறையில் செய்வதற்கும் மாணவர்களுக்கு வாய்ப்புகளை ஏற்படுத்தி தர வேண்டும். இதனால் 50 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 100 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் போதுமான செய்முறை வசதிகள், ஆய்வுக் கூடங்களில் ஏற்படுத்துவது அவசியமாகும். இந்த திட்டத்திற்கான மொத்த செலவு ரூ.90 இலட்சம் . எனவே, ரூ.90.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு 2005-2006 ஆம் ஆண்டின் பகுதி II திட்டத்தின் கீழ் வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. மேலே பத்தி 1இல் உள்ள பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று 2005-2006ஆம் ஆண்டில் பகுதி II திட்டத்தின் கீழ் 50 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 100 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் கருவிகள் வாங்குவதற்கு ரூ.90,00,000/- (ரூபாய் தொன்னூறு இலட்சம் மட்டும்) தொடராச் செலவினம் ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகின்றது.

3. மேலே பத்தி-2இல் உள்ள செவினத்தை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்றுவைக்கலாம்.

2202-பொதுக்கல்வி-02 இடைநிலைக்கல்வி 109. அரசு இடைநிலைப்பள்ளிகள்-பத்தவாது ஐந்தாண்டுத்திட்டம் II மாநிலத்திட்டம்-JA – அறிவியல் கற்பிப்பதற்கான வசதிகளை மேம்படுத்தல் 19. இயந்திரமும் சாதனமும்-01 வாங்குதல் (து.தொ.கு.2202 02 109 JA 1911)

4. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.21775/ Edn-II/2005, நாள் 25.4.2005-ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கிரிஜா வைத்தியநாதன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை 6.
மாநிலக்கணக்காயர், சென்னை 18.
மாநிலக்கணக்காயர், சென்னை 18 (பெயரில்)
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை-79
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-5.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை-35.
அனைத்து கருவூல அலுவலர்கள்.

நகல்

நிதி (கல்வி II / BG) துறை, சென்னை 9.
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை 9
மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை 9.
பள்ளிக்கல்வி (பட்ஜெட்) துறை,சென்னை 9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.